12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்
அவர்கள் அருளியது

# அன்புச் சேவுக!





**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி,
ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.**


## இந்து இலக்கியக் கழக வெளியீடு

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 வைகாசி மாதம்.**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

## அன்புள்ள சேவுக!

குருதேவர் தனது தலைமைச் சீடர் நெ.சேவுகனுக்கு எழுதிய அஞ்சல்களில் குருதேவர் அறிக்கையில் அச்சான அஞ்சல் கட்டுரைகளின் தொகுப்பு. குருதேவர் அறிக்கை 2 முதல் 19 வரை உள்ள அறிக்கைகளில் வெளியாகிய ‘அன்புச் சேவுக!’ அஞ்சல் வடிவக் கட்டுரைகள் இந்த வெளியீட்டில் உள்ளன. இடையில் குருதேவர் அறிக்கை 13இல் வெளியாகிய ‘கண்ணன் மனம் அனல் புனலே!’ என்ற கட்டுரை ஏற்கனவே ஒரு பதிப்பில் வெளியாகியுள்ளதால், இந்தத் தொகுப்பில் மீண்டும் சேர்க்கப்பட வில்லை.

“அஜுதிக்காலம் எனப்படும் 4,85,920 ஆண்டுக் காலங்களில் இப் புவிப்பரப்பு முழுவதும் ஆங்காங்கே தோன்றிய உயிரினங்களுக்கிடையில் தோன்றிய உயிரின வகைகளுள் ஒன்றாகத் தோன்றிய மணீசர்கள் மற்ற பயிரினங்களையும், உயிரினங்களையும் அடக்கியாண்டு வாழ்ந்தது போலவே; தங்களைப் போன்ற மணீச இனங்களையும் கூட எவ்விதமான மானுட இன உணர்வின்றி விலங்குகளோடு மோதுவது போல மோதித் தாக்கி வேட்டையாடி கொன்று குவித்து வெறிமிக்க களியாட்டம் ஆடினார்கள். அதைத் தடுத்து நிறுத்த ஞானவள்ளல்களாகிய, அருட்கொடை வள்ளல்களாகிய, அருளாட்சி நாயகங்களாகிய, அண்டபேரண்டம் ஆளும் மூலப் பதினெண்சித்தர்கள் **இந்துவேதத்தையும், இந்துமதத்தையும்** தங்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான **முத்தமிழ் மொழியில்** அருளினார்கள்.”

**இருக்கு வேதம் காண்டம்-1, மண்டலம்-4, நாள் உரைக்கோவை வாசகம்-7.**

**[குருதேவர் அறிக்கை: 2]**

# அன்புள்ள சேவுக!

"..... எனது முன்னோர்களால் கட்டப்பட்ட எல்லாக் கோயில்களிலும் கருவறைக்கு மேல் பொற்கலயம் வைக்கவும்; தாமரையும் அல்லியும் [பகலிரவு மலர்ந்த மலர் உள்ள தடாகமாக இருந்திடும்] நிறைந்த பளிங்கு போல் தெளிந்த நீருடைய பொய்கை எல்லாக் கோயில்களிலும் இடம் பெறவும்; கொடிய பல நோய்களைப் போக்கும் மூலிகைகளும், நறுமணமிக்க மலர்களும் பசுமை மாறாமல் வளரும் நந்தவனம் எல்லாக் கோயில்களிலும் இடம்பெறவும்; எல்லாக் கோயில்களிலும் ஆறுகாலப் பூசையின் போதும் புலமைமிக்க அருட்செல்வர்கள் உயிரும் உடலும் நலமுறும் சத்தாந்தக் கருத்துரைகளை அருள்வாக்காகச் சொற்பொழிவாற்றும் பழக்கம் நடைமுறைக்கு வந்திடவும்; எல்லாக் கோயில்களிலும் எல்லாத் திருவிழாக்களும் முறைப்படி இனிதே நிறைவேறிடவும்; உலகெங்கும் சித்தாந்தக் கருத்துக்களைப் பரப்புதற்குரிய அறிவும், புலமையும், பயிற்சியும் பெற்ற தொண்டர்களை உருவாக்கும் குருகுலக் கல்வி எல்லாக் கோயில்களிலும் முறையாக நடந்திடவும்; எல்லாக் கோயில்களும் பல்கலைக் கழகமாக, திருமண மண்டபமாக, மனமகிழ் மன்றமாக, கலைவளர் கூடமாக, மருத்துவமனையாக, உயிரின் நலம் பேணும் தெய்வீகக் கலைகளைத் தவத்திலாழ்ந்து பயிலும் தவப் பள்ளியாக; ....... ஆக்கிடுதற்குரிய தெளிவான, முறையான, முழுமையான திட்டங்கள் அனைத்தும் தீட்டி முடிக்கப்பட்டு விட்டன ......"

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

[குருதேவர் அறிக்கை: 5]

# அன்புள்ள சேவுக!

“...... நான் என்னுடைய ஏட்டறிவும், பட்டறிவும், முயற்சியும், உழைப்பும், உயர்நோக்கும், அக்கரையும், ஆர்வமும்,...... உலகுக்குப் பயன்படாமல் போய்விடக் கூடாதே என்ற அச்சத்தால்தான் அச்சங்கள் கடந்து அயராது பாடுபட்டு வருகிறேன்.

நான், உலகுக்கு வழங்குபவை அனைத்தும் உலக முதலினமான தமிழினத்தவர் உருவாக்கிய அறிவுச் செல்வங்களே! இவை தமிழர் புகழ் பாடுபவை மட்டுமல்ல; மனித இனத்தின் நல்வாழ்வுக்கு வழியமைப்பவை.

இன்றுள்ள கலை, இலக்கியம், சமுதாயம், அரசியல் முதலிய பெரும்பாலான துறையின் பெரும்பாலானவர்கள் மக்களைச் சிந்திக்க விடாமல் திசை திருப்பிப் போலிகளாக, கூலிகளாக, காலிகளாக, எடுபிடிகளாக, அடிமைகளாக, கோழைகளாக, தன்னல வெறியர்களாக, ஊழல் பேர்வழிகளாக உருவாக்கி வருகிறார்கள். இதனைத் தடுத்துத் திருத்தும் மாபெரும் பணியில் துணிவோடும், பணிவோடும் ஈடுபட்டிருப்பவனே நான்.

நான் எனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும், வசதியையும், பிறரின் ஏக்கங்களும், ஏமாற்றங்களும், தேக்கங்களும், விம்மல்களும், விசும்பல்களும், புலம்பல்களும், துடிதுடிப்புக்களும், இல்லாமைகளும், இயலாமைகளும் ...... அகற்றப் படுவதற்காகவே பயன்படுத்துவேன். இது உறுதி, உண்மை, வாய்மை என்பதனை என்னை ஆளாக்கிய என் தந்தை, பேராசான், சிந்தனையாளன்,

ஆராய்ச்சியாளன், மிகப்பெரிய படிப்பாளி, பொதுவுடமைத் தத்துவத்தின் தன்னிகரற்ற தலைவன், அரசியல் மாமேதை, அறிவியல் வித்தகன், சமுதாயத் தத்துவஞானி, சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமி முழுமையாக நம்பியது ஒன்றே எமக்குப் போதும், பிறரை நம்ப வைக்கும் முயற்சியில் ஈடுபடப் போவதில்லை நான்.

எனவே, நான் புகழுக்காகவோ! பொருளுக்காகவோ! பதவிக்காகவோ! ....... நடிக்க வேண்டிய அவசியமே எனக்கு இல்லை. எனவேதான், நான் எனது ஒவ்வொரு நொடி வாழ்வையும் சான்றுகளும், ஊன்றுகளும், சாட்சிகளும் நிறைந்த வரலாறாக உருவாக்கி வருகிறேன்.

இந்த வரலாறு; மானுட நல உரிமை என்றுவது எப்படியாவது செயலாகிட வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக அமைந்திடும். இதுவே எனது தெளிவான, முடிவான கருத்து! ......"

ஓம் திருச்சிற்றம்பலம்
அன்பே சிவம்!

**அன்பு**
**இந்துமதத் தந்தை**
**குருமகா சன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

[குருதேவர் அறிக்கை: 7]

# அன்புள்ள சேவுக!

நான் தனியனுகக் காடு, மேடு, ஆறு, கடல் என்று இயற்கை கொப்பளிக்கும் இடங்களிலெல்லாம் திரிந்த போது கூட அஞ்சவோ, கலங்கவோ இல்லை; பசி வேட்கையுடன் திரிந்த மிருகங்களின் முன்னுல் சென்ற போதும்; சீற்றமெடுத்துப் பாய்ந்து வரும் ஆற்று வெள்ளத்தில் நீந்திய போதும்; ஆர்ப்பரித்துப் பொங்கியெழுந்து நின்ற கடற் சூருவளியில் பயணம் செய்த போதும்; ஆரவாரித்து 'ஓ'வென்று சுழன்று சுழன்று அடித்த புயற்காற்றில் சிக்கிய போதும்; நான் மயங்கவோ, மதி மாறவோ இல்லை. இவைகளையெல்லாம் தாண்டி, மனிதர்களுக்காக, மானுட நலனுக்காக நான் பெற்ற அநுபவங்களையும், உற்ற ஏட்டறிவுகளையும், பட்டறிவுகளையும் சுமந்து வந்த போதுதான் தயங்கினேன், தடுமாறினேன், சிந்தித்தேன். சமுதாயம் மூடநம்பிக்கையாலும், மடமைப் போக்காலும், வீணுன வறட்டுவாதத் தத்துவத்தாலும் புரையோடிக் கிடப்பதைக் கண்டு துணுக்குற்றேன்! ஆழ்ந்து ஆராய்ந்தேன்!

எனது தந்தை, பகுத்தறிவு மேதை, மாபெரும் சீர்திருத்தவாதி, பொதுவுடமைச் சிந்தனைவாதியான காக்காவழியன் பண்ணையாடி M. பழனிச்சாமிப் பிள்ளையவர்கள் சமுதாயத்தைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் என் நெஞ்சில் ஆழத் தைத்தன. அப்போதுதான் எனது தந்தை என்னிடம் விட்டுச் சென்றிருக்கின்ற மாபெரும் பொறுப்பை உணர்ந்தேன். தமிழ் மொழிக்காக, நாட்டுக்காக, இனத்துக்காக, தமிழக - இந்திய - உலக வரலாற்றுக்காக, உலகச் சமயங்களுக்காக, உலக அறிஞர்களுக்காக, அறிஞர்களின் சாதனைகளின் உண்மையான பலனை அடைவதற்காக, மருத்துவத்திற்காக, கலைக்காக,

விஞ்ஞானத்திற்காக, தொழிலுக்காக, பொதுவுடமைத் தத்துவத்திற்காக,... என் மூலம் செய்ய வேண்டிய பணிகளை உணர்ந்தேன். நான் எதையும் என் சொந்தக் கருத்தாகவே தருவதில்லை. ஏட்டிலே இருப்பதை மீண்டும் மக்கள் மத்தியில் உம்மைப் போன்றவர்கள் மூலம் அள்ளித் தருகின்றேன், செயல்படுத்திப் பார்க்குமாறு அழைக்கின்றேன். உலக அமைப்பாளர்கள் அத்தனை பேரையும் உரத்த குரலில் அழைத்து உண்மைகளை எடுத்துரைக்கின்றேன்.

காலம் விடியுமென்று கதிரவனுக்காகக் காத்திருக்கவில்லை. ஏழிசை பாடுமென்று புல்லினங்கள் வரவுக்காக ஏங்கியிருக்கவில்லை. 'எனது கடன் பணி செய்து கிடப்பதே' என்று வறண்ட, முட்புதர்க் காடுகளை சரமாரியாக வெட்டி வீழ்த்தித் தந்து விட்டுச் சென்ற பகுத்தறிவுப் பகலவன், சிறைக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் பாதையில் உம்மைப் போன்றோரின் துணையோடு நடக்கின்றேன். ஆனால், இப்போதுதான் ஏச்சுக்களையும், பேச்சுக்களையும், ஏமாற்றங்களையும், தோல்விகளையும் சந்திக்க நேருமா? என்றஞ்சியே தாத்தாக்களின் ஆத்தாக்களின் துணையோடு எமது வாழ்க்கையையே தெய்வீகச் சோதனையாக்கிச் செல்லுகின்றேன். எம்முடன் நீயும் அணி வகுப்பாய்! உம்முடன் இந்த அவனியே அணி வகுக்கும் என்பதில் ஐயமில்லை!

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**

**[குருதேவர் அறிக்கை: 8]**

# அன்புள்ள சேவுக!

உனக்கு நான் மடல் வரையும் போதெல்லாம் என்னுடைய சுமையை நான் நினைத்துப் பார்க்கிறேன். ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் பீடாதிபதியாக பதவியேற்றிருக்கும் நான் என்னை முழுமையாக வெளிப்படுத்தி ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம்! ஏராளம்!! ஏராளம்!!! அவற்றில் ஓரளவு உன் மூலமாக இச்சமுதாயத்திற்கு வழங்கி வருகிறோம்.

கடந்த பத்தாண்டு கால இடைவெளியில் நமது குருகுலம் பொட்டலாக இருந்தது மாறி இன்று மெல்ல வளம் பெற்று செழிக்கத் துவங்கி உள்ளது. இதற்கு உனது உழைப்பு, உனது அமைதி, அடக்கம், பணிவு, பாசம், பற்று, கனிவு, பொறுமை, எதையும் தாங்கிச் செயல்படும் உணர்வுதான் காரணம். இவற்றை இவ்வியக்கத்தில் உண்மையுடன் செயலாற்றும் ஒரு சிலரே அறிவர். இந்த நீண்டகால இடைவெளியில் நீ பல்லாயிரம் மக்களை, பலவகைப் பட்ட மக்களை சந்தித்துப் பழகியிருக்கின்றாய்! புற்றீசல் போல், ஈக்கள் போல் நம் மீது வந்து மொய்த்து ஊடாடிச் சென்றோர் எண்ணற்றோர். அவரெல்லாம் இன்று விலகி வாய்மூடி மௌனியாகி இராமல், பழிகூறித் தூற்றி வரும் துரோகத்தனத்தைப் பார்க்கின்றோம்!

மனம் சலித்து, உடல் தளர்ந்து, உணர்வு இழந்து நாம் தவக்கோலத்தில் ஆழ்ந்து விடுவோமானால் ஆற்ற வேண்டிய அரும் பணிகள் என்னவாவது? தனியொரு மனிதனுக்காக நாம் கூனிக் குறுகி வெட்கித் தலைகுனிந்து சென்றால்; விதி வசத்தாலோ, மயக்க நிலையாலோ, கூலி மனப்பான்மையோடும், துரோக மனப்பான்மையோடும் வளர்ந்து வரும் நமது தமிழினத்தை எவரோ காப்பர்?

எனவேதான் அன்பு நண்ப!

நாம் நாள்தோறும் தேனீக்கள் போல் அயராது ஆற்ற வேண்டிய பணிகளை காலம் வரும் என்றும், பொருள் தேடி வரும் என்றும், புரவலர் வருவர் என்றும் காத்திராமல்; தமிழகம் எங்கணும் உள்ள நமது அடியான்கள் இயக்கக் குறிக்கோள்களை, கொள்கைகளை, திட்டங்களை கையெழுத்துப் படிவங்களாக ஆயிரக்கணக்கில் நாடோறும் எடுத்து நானிலம் எங்கும் அனுப்பி வருகின்றனர்.

இந்தத் தியாகங்களுக்கு முன்னால், இத்தகைய உழைப்புகளுக்கு முன்னால் நாம் நடை போடுகிறோம் என்பதை உணர்ந்து செயல்படுக! நாம் அன்றும் இன்றும் என்றும் மொழிக்காக, நாட்டுக்காக, இனத்துக்காக, சமயத்திற்காக என்ன செய்து வருகின்றோம்? என்ன செய்யப் போகின்றோம்? எப்படிச் செய்யப் போகின்றோம்? என்பதைத் தெளிவாகக் கூறியே செயல்பட்டு வருகின்றோம்.

எனவேதான் நம்மிடையே கருத்துக் குழப்பம் இல்லை! கொள்கைக் குழப்பம் இல்லை! அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலென்றே ‘வருமுன் வருவதை எரிமுன்னர் வைத்தது போல்’ ஆகிவிடக் கூடாதே என்று குருநிலையில் நின்று பலநூறு வேண்டுகோள்கள் விடுக்கின்றோம்.

உணர்ந்தவர் மீண்டார்! உணராதார் மாண்டார்!

**அன்பு**
**ஞாலகுரு**
**சித்தர் கருவூரர்**

[குருதேவர் அறிக்கை: 9]

# அன்புள்ள சேவுக!

எம் வாழ்க்கை 'ஒரு தெய்வீகச் சோதனையே' [My life is the Test of Divinity]. யாம் நஞ்சுண்ட மேனியனாகவே வளர்க்கப் பட்டும்; இம்மாஞாலம் முழுதும் பயிற்சி, முயற்சிகளில் தேர்ச்சி பெற்று முதிர்ச்சியுற்றும்; அரசயோகியாக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, இந்து மதத் தந்தையாக, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூராராக, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகச் செயல்பட்டும்; இந்துக்களை ஒற்றுமைப்படுத்தவோ, ஒருமைப்பாடு பெறவோ, ஆட்சியுரிமையை பெறச் செய்யவோ... முடியவில்லை...... இருந்தாலும், யாம், மேற்படிச் சாதனைகளுக்காக முயலவில்லை என்று எவரும் குறை கூறிடவே இயலாது.

இந்து மதம், பிறந்த நாட்டிலேயே மற்ற மதங்களால் வேட்டையாடப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும்; தொடர்ந்து அரசியல்வாதிகளின் சுயநல வெறியால் இந்துமதத்துக்கு விரோதங்களும், துரோகங்களும் நிகழ்ந்தே வருகின்றன. இவற்றை நிலையாகத் தடுத்தும், முழுமையாகத் தீர்த்தும் இந்து மதத்தைக் காத்து இந்தியாவைச் சிதையாமல் காப்பாற்ற வேண்டுமேயானால்; இந்திய விடுதலை வரலாற்றின் தத்துவ நாயகர்களாக விளங்கிய திரு எம். என். ராய், திரு எம். பி. பிள்ளை என்ற இருவரும் விட்டுச் சென்றுள்ள வரலாற்றுக் குறிப்புக்களை வெளியிட்டேயாக வேண்டும். ஆனால், இந்து மதப் பிறப்பிடமான தமிழகமே இன்னும் தன்னுணர்வு, இன ஒற்றுமை, மொழிப்பற்று, மத நம்பிக்கை ....... பெறாமலிருக்கிறதே!?! .........

நண்ப! கடந்த பன்னிரண்டாண்டுகளாக யாம் மந்திரவாதியாக, சோதிடராக, குறிகாரராக, மருளாளியாக, அருளாளியாக, பூசாறியாக,

மருத்துவராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, எழுத்தாளராக, ....... எப்படியெப்படி யெல்லாமோ செயல்பட்டும் கூடத் தன்னலக்காரர்கள், குறுகிய வெறியர்கள், ...... தங்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு **முதலாளித்துவப் போக்கில்** ஒதுங்கி விட்டனர்.

எனவே, நாம், இம்மண்ணுலகுக்குத் தனி மனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, ..... முதலிய அனைத்தையும் **'இந்து மதம்' எனும் 'சமூக விஞ்ஞானத்தால்'** [The Induism is a Social Philosophy] வழங்கிய பதினெண்சித்தர்களின் நேரடி உரிமை வாரிசு என்ற முறையில் செயல்பட்டேயாக வேண்டும். இதற்காக, 'இந்திய விடுதலை வரலாறு', 'விடுதலை பெற்ற இந்தியாவின் அரசியல் வரலாறு' என்ற இரண்டையும்; கண்டபக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை, சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை, உலகக் கம்யூனிச இயக்கம் நிறுவிய அறிவியல் மேதை எம்.என். ராய், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. ..... முதலியோர் எழுதிய வாசகங்களையும், எழுதாக் கிளவிகளாக விடுத்துச் சென்ற வாக்குகளையும் முடிந்தவரை அடுத்தடுத்து வெளியிட்டேயாக வேண்டும். இந்த நாட்டுப் பதிப்பகங்களையும், அறிவுலகத்தாரையும் நம்பிப் பயனில்லை. **யாம் எமது தாயகத்தில் ஓர் அன்னியனாகவே வாழ நேரிட்டிருப்பது தாங்க முடியாத வேதனையே!** நமது ஆர்வலர்களை ஆதரவாளர்களாக்க வேண்டியதே நமது உடனடிக் கடமை.

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்**
**இந்துமதத் தந்தை**

**[குருதேவர் அறிக்கை: 11]**

# அன்புள்ள சேவுக!

உரிமையை நிலைநாட்டிட ஆயுதங்களைத் தாங்கி புறப்படுகிறவன்; எண்ணற்றோர் உயிருக்கு முடிவையும், உடலுக்கு மாறா வடுவுடைய விழுப்புண்களையும் நல்குவதோடு; வெற்றித் திருமகள் அளித்திடும் வீரப்புண்கள் எனும் முத்திரைகளைப் பெற்றுத் தன்னை வீர வரலாற்று மாளிகைக்குள் நுழையும் உரிமை பெற்றவனாக்கிக் கொள்கின்றான்.

இறவாத தத்துவங்களை ஈன்றெடுப்பேன், உலகம் மறவாத அறிவுலக வரலாறு எழுதுவேன், வருங்காலம் என்றென்றும் கண்டு களிக்கக் கருத்து வளர்ச்சி மிக்க கலைக் கருவூலம் அமைப்பேன்; மேலும், தாழ்த்தப் பட்டவர்களை உயர்த்துவேன், வீழ்த்தப் பட்டவர்களை எழுச்சி பெறச் செய்வேன், மூடி மறைக்கப் பட்ட பேருண்மைகளைத் தேடிக் கண்டுபிடித்து வெளிக் கொணருவேன், கோழையை வீரனாக்குவேன், எங்கும் எதிலும் இருள் படியாப் பேரொளியை ஏற்றி வைப்பேன், '<u>கண்டவர் விண்டார்</u>' என்ற புதுப் பெருமையைப் படைப்பேன், '<u>கடை விரித்தேன் நல்ல வியாபாரம் நடந்தது</u>' என்ற அடைய முடியாப் பெருநிலையை அடைவேன்; என் மொழி, என் இனம், என் நாடு என்பவை எனது மூன்று நாடித்துடிப்பு. நான் எடுக்கும் முயற்சிகளும், பிறர் தடுக்கும் முயற்சிகளும் வீர வரலாற்றின் படிக்கட்டுகள்.....; என்று சூளுரைத்து வாளின்றி, வேலின்றிப் போர் புரியப் புறப்பட்டவன் நெஞ்சமும், சிந்தையும்,

எண்ணற்ற வீரப் புண்களைப் பெற்று வடுக்கள் மிகுந்த திருவுருவைத்தான் பெற்றிட முடியும்.

கண்ணுக்கு விருந்தாகாது வீர உடல்; கருத்துக்கும், நாட்டு நல்வாழ்வுக்கும் விருந்தாகுதலே வீர உடல். நெடிய, பெரிய பயணங்கள்; கடுமையும், கொடுமையும் நிறைந்த அநுபவங்கள்; கடந்த காலம் இருளும், இன்னலும், இழப்பும், இழிவும், அழிவும், பழியும், வெடிப்பும், நொடிப்பும் மிக்கவை. நாற்றமடிக்கும் குப்பையால் நறுமணமிக்க மலர்களையும், சுவைமிக்க கனிகளையும் பெறலாம். மண்வாகுக்கேற்பவே பயிர் செய்யலாம்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

**<u>குறிப்பு</u>:** அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் பரமாச்சாரியார் அவர்கள் குருவைத் தேடியலைந்த போது, மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கருங்காலக்குடி உயர்நிலைப் பள்ளியில் **'சமயமும் விஞ்ஞானமும்'** என்ற தலைப்பில் குருதேவர் உரையாற்றியதற்கு பின்னால் ஈர்க்கப்பட்டு குருதேவருக்கு கடிதம் எழுதினார். அதற்குப் பதிலாக 29-4-1973 அன்று குருதேவர் முதன்முதலில் எழுதிய கடிதத்தின் நகலையே வெளியிட்டுள்ளோம்.

[குருதேவர் அறிக்கை: 12]

# அன்புள்ள சேவுக!

எல்லோருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் எளிதில் கிடைத்து விடும் என்று எதிர்பார்த்துப் பொதுநலத் தொண்டு ஆற்றிட இயலாது. தேவையில்லாமல் பிறரின் தலையீடும், காழ்ப்பும், போட்டியும், பொருமையும், அறியாமையும் பொதுநலத் தொண்டர்களைத் திணறித் திக்குமுக்காடச் செய்திடும். அதிலும், எவரும் எளிதில் ஏட்டறிவாலோ, பட்டறிவாலோ தெரிந்து கொள்ள முடியாத பேருண்மைகள் நிறைந்த அருளுலகில் தொண்டாற்றுவது என்பது எளிதல்ல!

இவ்வுலகில் விளாதிமீர் இலிச் இலெனினுக்கும், மாசேதுங்குக்கும் அடுத்து மூன்ருவது நிலையில் வைத்து எண்ணப்படும் மாபெரும் மார்க்சீயத் தத்துவ மேதையால் முழுக்க முழுக்கப் பகுத்தறிவுப் போக்கிலும், விஞ்ஞானச் சூழலிலும், சீர்திருத்த நோக்கிலும் வளர்க்கப் பட்ட எம்மையே ...... நெருங்கிப் பழகுபவர்களில் கூடச் சிலர் மதவாதி, மடமைவாதி, மூடநம்பிக்கைக்காரன், பழமைவாதி, மந்திரவாதி, சோதிடன், உடுக்கையடிக்கிப் பூசாறி ...... என்று குறை கூறுகிருர்கள். யாம், மிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், காலக் கணக்கிட்டு; வரலாற்றையும், இலக்கியத்தையும் துணையாக்கி..... எமது பணிகளுக்குரிய கொள்கை, செயல்திட்டம், குறிக்கோள் முதலியவைகளை எழுதியும், அச்சிட்டும், பேசியும்; ஆயிரமாயிரம் இளைஞர் மூலம் செயலாக்கியும் கூடப் பிறரின் கேலியும், கிண்டலும், ஏளனமும், எதிர்ப்பும், ஒதுக்கலும், பதுக்கலும், நீக்கலும், இருட்டடிப்பும்தானே பரிசாகக் கிடைக்கின்றன!

நண்ப! யாம், முறையாக மழலை மொழி பேசிய காலத்திலிருந்து எந்தையிடம் உலக வரலாறு, இலக்கியம், தத்துவம், மருத்துவம், பிற கலைகள்....... அனைத்தும் பாடம் கேட்டதோடு; உலகியல்படி விஞ்ஞானம் கணிதம் பயின்று இளங்கலைப் பட்டமும்; தமிழ் பயின்று

முதுகலைப் பட்டமும்; அரசியல் சமுதாய இயல் பற்றி நாலாண்டுகளுக்கு மேல் முழுநேர அரசு ஆராய்ச்சி மாணுக்கனுக டாக்டர் பட்டத்துக்கு உழைத்தும்; இன்று உலகியலோடு ஒட்டி உறவாட அரசுப்பணியில் பொறுப்போடு பணியாற்றியும் கூட ..... எம்மைப் 'பூசை மணியாட்டும் பண்டாரப் பயல்', 'தேவாரம் திருவாசகம் ஓதித் திரியும் தேசிகன்', 'கோயில் சாப்பாட்டில் வாழும் குருக்கள்'; 'மந்திரக்காரன்'; 'குறிகாரன்'; 'சுடுகாட்டுச் சூன்யக்காரன்'; 'மை வேலைக்காரன்'; 'புராணப் பித்தன்'; 'மத வெறியன்'...... - என்றுதானே வெறுத்தும், மறுத்தும், பழித்தும், இழித்தும் பேசுகிறுர்கள்.

நண்ப! பதினெண்சித்தர்களின் வாக்குகளும் வாசகங்களும் எம் காலத்து மண்ணும் விண்ணும் இணையுமென்று உறுதி வழங்கியிருப்பதால்தான்; யாம், பதினெட்டாண்டுப் பயிற்சிகளையும், பதினெட்டாண்டு முயற்சிகளையும் நிறைவு செய்ததோடு நிம்மதியாகக் குருமகா சன்னிதானமாகப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடத்தில் அமர்ந்து போகியாகவும், யோகியாகவும் வாழ்ந்திட வில்லை. யாம், எமக்குக் கிடைக்கும் வசதி வாய்ப்பு, சூழல், ஆதரவு, ஏந்து, நட்பு, தோழமை, ... முதலிய அனைத்தையும் பொதுநல நோக்கோடு பயன்படுத்தி '**அரசயோகி**'யாக, '**அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக**', '**இந்து மதத் தந்தையாக**', ...... உயர்ந்தோம். இன்று, தாமிரபரணியாற்றங்கரைக் கருவூறுர் '**ஞானுச்சாரியார்**' என்று எம்மைப் போற்றி ஏற்றி அருளும் நிலையையும் பெற்றுள்ளோம். ஆனுல், எம்மை நாடி வருபவர்கள் எமது அருளால் தங்களின் குறை, துன்பம், தொல்லை, ..... முதலியவற்றைத் தீர்த்துக் கொள்ளத்தான் வருகிறுர்களே தவிர; யாரும் ஞானத்தைத் தேடி வரவில்லை. இதுதான் நம் மக்கள் நிலை .... புரிந்து செயல்படுக.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூறுர்**

[குருதேவர் அறிக்கை: 14]

# அன்புள்ள சேவுக!

யாம் சாதாரணச் சித்திகளைப் பெற்ற அருளாளர்களைப் போல் ஓரிடத்திலமர்ந்து கொண்டு எம்மைக் காண வருகிறவர்களை எம்முடைய அருள் எல்லைக்குள் கொண்டு வந்து அவர்களுடைய அக, புற போராட்டங்கள் தற்காலிகமாக அமைதியடையும்படிச் செய்து செயல்பட்டிட்டால்; இந்நேரம் உலகம் முழுவதும் எமக்கென ஒரு பெரிய மாபெரும் கூட்டத்தையும், எண்ணற்ற அமைப்புக்களையும் பெற்றிருக்க முடியும். ஆனால், யாம் அப்படிப்பட்ட மாயாநிலைச் செயல் புரிந்து எம்மை மட்டும் வளர்த்துக் கொள்ள விரும்பியதே இல்லை.

எனவேதான், யாம், இம்மண்ணுலகில் இதுகாறும் தோன்றிட்ட அனைத்து வகையான அருளாளர்களின் வாழ்வியல்களையும், சாதனைகளையும் இணைத்துப் புதுமைப்படுத்தி உலகந் தழுவிய நிலையான நன்மைகளை விளைவிக்க 'அருட்புரட்சி' முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

நிலத்திலிருந்து தங்கம் கலந்து மண்ணை வெட்டியெடுத்துக் குவிப்பதுபோல்தான் இதுவரை உலக அருளாளர்கள் அண்டபேரண்டத்துள் புதைந்து கிடக்கும் அருட்சத்திகளை வெளிக் கொணரும் முயற்சியில் மட்டுமே தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சென்று விட்டார்கள். அவர்கள் செய்யாதது; தங்கத் தாதுக்களை ஒன்றுதிரட்டி, கட்டித் தங்கத்தை உருவாக்குவதும்; அப்படி உருவாக்கிய தங்கத்தை உலக மக்களின் நல்வாழ்விற்குப் பயன்படும்படிச் செய்வதும் போன்று; தங்களுடைய வாழ்வின் சாதனைகளை வடிவமைப்புப் படுத்தி என்றென்றும் அருட்சத்தி

மக்களின் நன்மைக்கு பயன்படும்படியான செயல்திட்டத்தை வகுக்காமல் சென்றதால்; இக்குறையை நிறைவு செய்யவே இவ்வியக்கத்தைத் துவக்கிச் செயல்படுகின்ருேம். இதுதான் எமது தத்துவம், குறிக்கோள், சட்டதிட்டம்.

அன்பு நண்ப! அருளுலகில் மாணுக்கர்கள் குருவைத் தேடிக் கண்டுபிடித்தாலும்; அக்குருவின் பின்ஞல் பலகாலம் அலேந்து, பலவாறு தொண்டுகள் புரிந்து அதன்பிறகே குருவின் அருளேப் பெறுவதென்பதே மிகப்பெரிய மரபாக இருந்து வருகின்றது. இதே நேரத்தில் அருளுலகில் ஒருசில குருமார்கள் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் தேடியலேந்து விரல்விட்டு எண்ணக்கூடிய சில மாணுக்கர்களே மட்டுமே உருவாக்கி அருள் வழங்கித் தங்களின் நினேவாகப் புதியதொரு கூட்டத்தை உருவாக்கிச் சென்று விடுவதும் மரபாக இருக்கின்றது.

யாம், இப்படிப்பட்ட அருளுலகில்தான் பாரம்பரியமாகப் பெற்ற அருளேயும்; பயிற்சிகளாலும் முயற்சிகளாலும், கல்வி கேள்வித் தொண்டுகளாலும், ... பெற்றிட்ட அருட்செல்வங்களேயும்; இப்புவிப்பரப்பின் பெரும்பாலான பகுதிகளுக்கு தலேமேல் தூக்கிச் சென்று கூடைக்காரி போல் ‘அருளோ அருள்’ என்று கூவி, வாரிவாரி மலிவு விலேக்கு வழங்கிப் பார்த்துவிட்டு; இந்தியத் துணேக்கண்டத்திலும், இதனேச் சார்ந்த நாடுகளிலும் உள்ளவர்களுக்குத் தாங்கள் அறியக் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இஞமாகவே வழங்கி விட்டோம். தம்மையும் புரியாமல், எம்மையும் புரியாமல் சிறுபிள்ளேத்தனமான செயல்களில் ஈடுபட்டு வீணுகிக் கொண்டிருக்கும் அருளுலக மாணுக்கர்களே எண்ணி வருந்துகிருேம்.

உலக மதங்களுக்கெல்லாம் மூலமாகவும், தாயாகவும் இருப்பது இந்துமதமே. இந்துமதத்துக்கு மூலமாகவும், தாயாகவும் இருப்பது தமிழினமே. எனவேதான், நமது இன மக்களான தமிழர்களை அருளுலகத் தலைவர்களாக உருவாக்கும் பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ளோம் யாம். ஆனால், நம்மவர்கள் ஊசலாட்டம் மிகுதியாக உடையவர்களாக இருக்கிறார்கள். இதனால், இவர்கள் சில அடிகள் முன்னோக்கி நடந்த உடனேயே பயந்து பல அடிகள் பின்னோக்கி நடந்து விடுகிறார்கள்.

அதாவது, எல்லா மதவாதிகளையும் போல நமது இயக்கச் செயல்திட்டங்கள் வெறும் பொழுதுபோக்குக்கு உரியனவைகளாகவோ, குறுகிய வட்டாரத்தார்களுக்கு மட்டுமே பயனளிக்கக் கூடியவைகளாகவோ, ஆரிய வேதநெறிக்கு அடிமைப்பட்டதாகவோ இல்லை என்பதனால்தான்; குருட்டு மதவாதிகளும், தன்னல வெறியர்களும், சந்தர்ப்ப வாதிகளும் விலகிச் செல்கின்றனர். எனவே, களைகள் களைவதைப் பற்றி கவலையடைய வேண்டாம்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

[குருதேவர் அறிக்கை: 15]

# அன்புள்ள சேவுக!

மகாத்மா காந்தியைப் போல் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் 'திராவிடக் கழகத்தை'ப் பலமுறை கலைத்தார். அதற்கு அவர் கூறிய காரணம், "என் பெயரைச் சொல்லிக்கிட்டு பொறுக்கித் திங்கிற கூட்டம் வளர்ந்து விடக் கூடாது. நான் யாரோ சிலருக்கு மட்டும் சொந்தக்காரன் என்று ஆகிவிடக் கூடாது. நான் சொல்ற கருத்துக்களை சாதி, மதம், கட்சி என்ற வேறுபாடெல்லாம் இல்லாம எல்லாரும் சிந்திக்கணும், செயலாக்க முயற்சிக்கணும். அப்பத்தான் மடமையெல்லாம் ஒழியும், பித்தலாட்டங்களும், ஏமாற்றுக்களும் போகும். இந்த காந்தி கூட சுதந்திரம் வந்திச்சு, காங்கிரசைக் கலைச்சுட்டேன் என்றுரு. ஆனு ஒரு பயலும் கேட்கவில்லை. ஏன்னு காங்கிரசுக் கட்சி என்று ஒன்றை வச்சுக்கிட்டு நாங்கதான் சுதந்திரம் வாங்கித் தந்தோம், நாங்கதான் சுதந்திரத்துக்காக கஷ்ட நஷ்டப் பட்டோம், எங்களுக்கு ஓட்டுப் போடுங்கன்னு சொல்லி அவனவன் பட்டம் பதவின்னு வாங்கிக்குனு கொள்ளையடிக்கிருனுக! முதல்லே காந்தி சொன்னுப் போல இந்த காங்கிரசு கட்சியை ஒழிக்கணும். அப்பத்தான் இந்த நாட்டிலே நல்லது நடக்கும். இது மாதிரிதான் இப்பவே தி.க.வை கலைச்சுட்டேன். அவங்கவங்க விருப்பப் பட்ட கட்சியிலே சேர்ந்து தொண்டாற்றுங்க! நாட்டுக்காக நல்லது செய்யுங்க! தி.க.வில் உள்ளவர்களெல்லாம் காங்கிரசு கட்சியிலே சேர்ந்து பச்சைத் தமிழன் காமராசர் கையை வலுப்படுத்துங்க!" *

---

* இப்படி பெரியார் அறிவித்ததற்கேற்ப பல தி.க.வினர் காங்கிரசில் சேர்ந்தனர். இப்படிச் சேர்ந்தவர்கள் இன்றைக்கும் இருக்கிருர்கள். இதை இன்றுள்ள தி.க.வினரும், காங்கிரசுவாதிகளும் ஏற்றுக் கொள்வார்கள். இது பற்றிய கார்டூன்கள் ஆனந்த விகடனில் காணலாம்.

இப்படிப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மிக நுட்பமான தொலைநோக்குடன், தான் உண்டாக்கிய திராவிடக் கழகத்தைக் கலைத்திட்ட வரலாற்று நிகழ்ச்சியை தெரிந்து கொள்ளாத திராவிடக் கழகத்தவர்களே நிறைய உள்ளனர். எனவே, பெரியாரின் அந்தச் செயலைப் புரிந்து கொள்ளாதவர்களே இன்றைக்கு பெரும்பாலானவர்கள் இருக்கின்றனர் என்பது தவறல்ல. பெரியார் பயந்தது போலவே, அவருடைய குறிக்கோள்களும், கொள்கைகளும் அவருடைய கழகத்துக்கு மட்டுமே உரியவை என்பது போல் அதனுடைய இன்றைய தலைவர், தளபதி கி. வீரமணி செயல்படுகின்றார். இது மிகவும் வருந்தத் தக்கது. பெரியார் ஈ.வெ.ரா. கூறிய கொள்கைகளையும், அடைய நினைத்த குறிக்கோள்களையும் செயல்வடிவில் வாழ வைக்கக் கூடியவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டிச் செயல்பட வைக்கக்கூடிய தலைமைப் பண்பு, பொது நோக்கு, தீவிரப் போக்கு, ஆர்வமிகு போராற்றல்..... முதலியவைகள் எதுவுமே இல்லாதவராகத்தான் தலைவர் வீரமணி உள்ளார்.

அன்பு நண்ப! நண்பர் கி. வீரமணி அவர்கள், தமிழினத்தின் உரிமைக்கும், பெருமைக்கும்; தமிழ்ச் சான்றோர்களின் உரிமைக்கும், பெருமைக்கும் கடுமையான சோதனைகள் ஆபத்துக்கள் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன என்று தெரிந்தும்; அதற்காகப் பல்வேறு துறையைச் சார்ந்த அனைத்துத் தமிழர்களையும் ஒன்றுதிரட்டி உரிமைக்காகவும், பெருமைக்காகவும் இறுதிவரை போராடவேயில்லை. ஏதோ பெயருக்கு ஆங்காங்கே ஓரிரு நாள் போராட்டங்களையும், ஒரு சில அறிக்கைகளையும் வழங்கி விட்டு; தொடர்ந்தோ, துணிந்தோ போராடாமல் கோழையைப் போல் விலகி, ஒதுங்கி, எதிலும் பட்டுக் கொள்ளாமல் செயல்பட்டு வருகின்றார்.

நாம் முழுமையான பிருமண எதிர்ப்பாளர் என்பதை உணர்ந்தும் நண்பர் வீரமணி அவர்கள் இன்றைய தினம் 'தான், பிருமணர்களின் எதிர்ப்பாளன் அல்ல; பிருமணீய எதிர்ப்பாளனே' என்று கூறி வருவதோடு, நம்முடைய செயற்குழுவிற்கு பேட்டி தர (23-3-1985) பொன்னேரியில் மறுத்து தன்னை சங்கராச்சாரியாரின் எதிர்ப்பாளனல்ல, தான் ஒரு பிருமணதாசன் என மெய்ப்பித்துக் கொண்டார்.

அன்பு நண்ப! நாம் பெரியார் தோற்றுவித்த திராவிடக் கழகத்தை இறுதியாக நம்பியிருந்தோம். அவர்களும் தங்களின் உண்மை வடிவத்தைக் காட்டிக் கொண்டு விட்டதால் வேறு வழியில்லை. நாம் தனித்தே தமிழினத் தந்தை, தந்தை பெரியார் அவர்களின் மாபெரும் சமுதாய மறுமலர்ச்சிப் பணிகளை கட்டுரைகளாக, கவிதைகளாக, மந்தையிலே உரைகளாக, சொற்பொழிவுகளாக வெளிப்படுத்தியே தீர வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப் பட்டிருக்கின்றோம். ஏற்கனவே உள்ள சமய மறுமலர்ச்சிப் பணியோடு தந்தை பெரியாரின் சமுதாயப் பணிகளையும் வெளிப்படுத்திச் செயலாக்குவோம்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்**

**[குருதேவர் அறிக்கை: 16]**

# அன்புள்ள சேவுக!

சில ஆயிரம் பேர் ஒருங்கு கூடி ஒற்றுமையுடன் திட்டமிட்டபடி மிகப் பெரிய திருவிழா நிகழ்த்தியிருக்கிறோம். ஆனால், இத்திருநாட்டுப் பதிப்பகங்களோ, செய்தியேடுகளோ, சமய சமுதாய அரசியல் கலை இலக்கியக் கழகங்களோ, தனிமனிதர்களோ, ...... நம் பக்கம் திரும்பவில்லை; நம்மை விமரிசிக்கவில்லை.

நாமும் பல நூறுயிரக்கணக்கான அறிக்கைகளையும்; விரல்விட்டு எண்ணிடக் கூடிய அளவு பத்துப் பன்னிரண்டு நூல்களையும்; ஏட்டையும், நாட்டையும் கதிகலங்கச் செய்யும் கருத்துக்களைத் தாங்கி வரும் மாத இதழ் **'குருதேவர்'** அறிக்கையை இரண்டாண்டு காலமாக வெளியிட்டும்; நமது முழுநேர ஊழியர்களும், பகுதிநேர ஊழியர்களும் நாடெங்கும் கருத்துரையாடல், விவாதம், சொற்பொழிவு, அருளுரை, அருள் வழங்கல்,...... என்று நேரடியான கருத்துப் புரட்சியில் ஈடுபட்டும், ...... செயல்படுகிறோம். **பிறகு, ஏன் நமக்கு எதிர்பார்க்கும் வரவேற்பில்லை?**

நண்ப! யார்யாரோ திடீரென்று அருளாளர்களாக வெளிப்படுகிறார்கள்; பொருளுலகச் செல்வாக்கும், விளம்பரமும் பெற்றிடுகிறார்கள். நமக்கு அவர்கள் மீது பொறாமையில்லை. அவர்கள், அருட்புதையல் எடுத்தவர்களாகத் தன்னல வாழ்வு, குறுகிய வட்டாரச் செயல், மொழி இன நாட்டு உணர்வற்ற

போக்கு, எல்லா மதவாதிகளையும் போல் பசனைக் கூட்டமாகச் செயல்படல்.......... என்று செக்குமாடு போல சுற்றிச்சுற்றி வருகிறார்கள். இவர்களைப் போன்ற அனைவருக்கும் உயிராக, உள்ளீடாக, வாழ்வாக, தத்துவமாக, வேலியாக......... இருப்பவர்களே நாம். கடவுள்களையும், வழிபாட்டு நிலையங்களையும், மனித வாழ்வின் முன் பின் மறைகளையும், அண்ட பேரண்டங்களையும் விளக்கிடும் அறிவும், ஆற்றலும், ஆண்மையும் உள்ளவர்களே நாம். எனவே, உலக ஆன்மநேய ஒருமைப்பாடு, இந்து மறுமலர்ச்சி, மதவிழிச்சி, ஆவி-ஆன்மா-உயிர் ஒன்றுபடல்,...... என்று செயல்படும் நாமே சமயத்துறையின் வழி, வழிகாட்டி, வழித்துணை, வழிப்பயன், வழிக்காவல், ....... என்பதை உணர்ந்து அமைதியோடு செயல்படுவோமாக.

எத்தனையோ சிறிய பெரிய சமய சமுதாய அரசியல் கலை இலக்கியக் கழகங்கள், கட்சிகள், இயக்கங்கள், சபைகள், குழுக்கள்...... இன்றைய உலகியலில் அந்தந்த வட்டாரங்களில் ஏற்படக் கூடிய ஒரு சில சிக்கல்களை எதிர்த்துப் போராடிச் சிறுசிறு வெற்றிகளையும் பெற்றிடுகின்றார்கள். இவைபோல், நாம் ஏன் நேரடிப் போராட்டங்களில் ஈடுபடவில்லை என்ற ஆதங்கமும், ஏக்கமும், குற்றச்சாட்டும் எழுந்துள்ளன. இது தவறு. ஏனெனில், மேற்படி அமைப்புக்கள் **'தற்காலிகமான தீர்வுகளையே'** [Temporary reliefs] உண்டாக்குகிறார்கள். நாம், அப்படியல்ல. குறைகளுக்கும், கறைகளுக்கும் காரணமாக இருக்கக்கூடிய அனைத்துத் தீயவைகளையும் முழுமையாக அகற்றிடும் மாபெரும் பணியிலேயே ஈடுபட்டுள்ளோம். நம்மால், தனிமனிதர்களும், குடும்பங்களும், சமுதாயமும்,...... முழுமையான செம்மைநிலையைப்

பெற்றுவிடும். அதன்பிறகு, இன்று நிகழும் போராட்டங்களுக்கோ, போராடும் அமைப்புக்களுக்கோ அவசியமே இருக்காது.

நம்மவர்கள் 'குருதேவர்' அறிக்கைகளை விற்பதிலும்; பொது இடங்களிலும், வழிபாடுகளிலும் நமது குருதேவர் அறிக்கைகளைப் படித்துக் காட்டுவதிலும்தாம் நமது வளர்ச்சியிருக்கிறது. நம்மவர்கள் இதுவரை வெளிவந்துள்ள அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும்; புத்தகங்களையும் திருப்பித் திருப்பி ஊன்றிப் படித்து கொள்கை விளக்கம் வளமாகவும், வலிவாகவும் பெற்றுக் கொண்டேயாக வேண்டும். இதுவே உடனடிச் செயல்திட்டமாக அமையட்டும்.

விரைவில், நேரடிப் பயிற்சியால் ஒருசில முழுநேர ஊழியர்களை உருவாக்கியேயாக வேண்டும். பக்குவம் உடையவர்களுக்கு அருளாற்றலும், அருட்கலைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டேயாக வேண்டும். இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தால் உடனே சுற்றுப்பயணம் வரத் தயாராகவுள்ளோம் யாம்.

எம் காலத்துள் அருளாட்சி அமைய வேண்டும்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்**

**இந்துமதத் தந்தை**

[குருதேவர் அறிக்கை: 18]

# அன்புள்ள சேவுக!

அஞ்சல் வடிவக் கட்டுரைகளும், கட்டுரைகளும், நூல்களும் பழைய நூல்களைத் தேவைக்கேற்ப சிறுசிறு செய்தித் தொகுப்பாக வடிவப்படுத்தும் செய்திக் கட்டுரைகளும், ....... எழுதி எழுதிக் கோப்புகள் நூற்றுக்கணக்கில் குவிந்ததுதான் மிச்சம், பயன் ஏதும் உருப்படியாக எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை.

நெஞ்சத்தில் நெருப்புக் கடல் கொதித்துப் பேரலைகள் மிகுந்து அனல் புயல் வீசவாரம்பித்து விட்டது. இனியும், தாமதிக்கக் கூடாது! தாயகத்து மக்களைத் தவறான, போலியான, சோம்பலான, ஏமாளியான, கோமாளியான, மோசமான, மோசடியான, கூலிப் போக்குடைய, அடிமைச் சிந்தையுடைய, பயனற்ற...... வாழ்க்கை வாழுமாறு செய்யும் மத்திய, மாநிலச் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் தொழில் துறைத் தலைவர்களை எண்ணி எண்ணிச் சிந்தை எரிமலை எனக் குமுறி வெடித்துச் சிதறி நெருப்புக் குழம்பு ஆறாக ஓட ஆரம்பித்து விட்டது. இருமருங்கும் சாம்பல் மேடுகள் கரைகளாக உயர்ந்து வருகின்றது.

இந்தியத் துணைக்கண்டத்தில் மக்களின் உள்ளத்தைத் தொட்டும், சிந்தையைத் தட்டியெழுப்பியும், உணர்வில் நிறைந்தும் செல்வாக்குப் பெற்றுத் தலைமை தாங்கி வழி நடத்தக் கூடிய தலைவர்களேயில்லை [Neither the leaders are inspired nor they can inspire others]. அதாவது, தன்னம்பிக்கையும் தன்னுணர்வும், அகஞானமும், புற ஞானமும் மீக்கூரப் பெற்றுத் தற்கவர்ச்சியும், புறக்கவர்ச்சியுமுடைய தலைவர்களே நம் நாட்டில் ஏறத்தாழ இல்லை! இல்லை!! இல்லை!!!

எனவேதான், எங்கும் இருள்! இன்னல்! இடர்! இழிவழிவு! ஏமாற்று! சுரண்டல்! கொள்ளை! அநியாயம்! அநீதி!

நண்ப! அனைத்துத் துறைகளில் உள்ள தலைவர்களும், தங்களுக்கு எதிர்பாராமல் கிடைத்த மதம், சாதி, பாரம்பரியம், பணம், புகழ்,...... முதலிய போலியான செல்வாக்கை வைத்துக் கொண்டு ஏமாற்று வேலையே செய்து வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும்; ஒரு குறிப்பிட்ட காலம் வரை மக்கள் செம்மறியாட்டு மந்தை போலத் தங்களின் பின்னால் வந்தே தீருவார்கள் என்பது. எனவேதான், இவர்கள் கொள்கையோ [Policy], நெறியோ [Principle], முறையோ [Standard approaches and attitudes of procedure], குறிக்கோளோ [aim]...... இல்லாமல் சுயநலவெறி கொண்டவர்களாகவே செயல்படுகிறார்கள். அதாவது, இவர்கள் தங்களின் குடும்பம், சொந்தம், உறவினர், நண்பர், இயக்கத்தவர்...... என்ற குறுகிய எல்லைகளையே பாதுகாப்புக் கோட்டைகளாகவும், நடைபாதைகளாகவும் கொண்டு செயல்படுகிறார்கள்.

நண்ப! இன்றைய இந்தியத் தலைவர்கள் அனைவருக்குமே மிக நன்றாகத் தெரியும், தாங்கள் மக்களை ஏமாற்றுகிறோம் என்று. எனவேதான், அவர்கள் மக்கள் எப்போது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் தங்களை மறுக்கக் கூடும், வெறுக்கக் கூடும்,...... என்பதைத் தெளிவாக உணர்ந்து, அதற்கேற்ப எச்சரிக்கையாகவே வாழுகிறார்கள். இவற்றால்தான், எந்தத் தலைவரும் உண்மையான பிடிப்போடும், துடிப்போடும் செயல்படுவதேயில்லை. இப்படிப்பட்ட ஓர் இரண்டுங் கெட்டான் நிலையில் தலைவர்களும், மக்களும் உள்ள காலத்தில்தான் நாம் செயல்படுகிறோம் என்பதை எண்ணும்பொழுதுதான்; நமது இன்றைய கொள்கை முழக்க, விளக்க வளர்ப்பு முயற்சிகள் மாற்றிக் கொள்ளப்பட வேண்டுமோ என்று எண்ணுகிறோம் யாம்.

நண்ப! யாம் தாலாட்டுப் பாடல்களாகவும், காவடிச் சிந்துகளாகவும், தெம்மாங்குகளாகவும், கலை நிகழ்ச்சி இன்னிசைப் பாடல்களாகவும், கதை நிகழ்ச்சி வில்லுப்பாடல்களாகவும், நாடகங்களாகவும், ...... நமது வரலாறுகளையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் எழுதிவிடலாமா? என்று எண்ணுகிறோம். இது ஒருவேளை எமக்குப் பெரிய வீழ்ச்சியாக இருக்கலாம். ஆனாலும் வேறு வழியில்லை. கலைகளின் மூலம்தான் நமது கருத்துக்களைப் பரப்பியாக வேண்டுமென்ற நிலை நம்மவர்களால் விரும்பி வரவேற்கப்படுகிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம் யாம்.

நண்ப! நாம் அ.வி.தி.யின் பெயரால் பயிற்சி கொடுத்து வளர்த்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் அனைவருமே கோபுரத்தைத் தாங்கள்தான் தாங்கும் பதுமை போல் இருக்கிறார்கள். எனவே, இ.ம.இ.யின் மூலம் ஆங்காங்கே சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், சிறப்புக் கூட்டங்கள், பட்டிமன்றங்கள், ...... முதலியவை நிகழ்த்தி நமது வரலாறுகளையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் நேரடியாகப் பொதுமக்களிடம் விளக்கி நமக்கு ஆதரவு திரட்டினால்தான் முடியும். அதாவது, அ.வி.தி. செயல்வீரர்களால் தேவையில்லாத போட்டிகளும், பொறாமைகளும், சண்டைசச்சரவுகளும், நிறுவன நிர்வாகச் சீரழிவுகளும்தான் ஏற்படுகின்றன. விரிவாக உங்களின் நெஞ்சந் திறந்த உணர்வுநிறை எண்ணங்களைப் பதிலாக உடனே அனுப்புமாறு வேண்டி இந்த அஞ்சலை நிறைவு செய்கிறோம்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

**14-7-1985**

[குருதேவர் அறிக்கை: 19]

# அன்புள்ள சேவுக!

யாம், அன்னியர்களுக்கு மட்டும் புதியவனாக இல்லாமல்; நம் தாயகத்து மக்களுக்கும் புதியவனாகவே உள்ளோம். ஆனால், இந்த எமது சொந்தநிலை; நமது இயக்கத்துக்கும் தொடர்ந்து வந்துவிடக் கூடாது என்பதால்தான்; இந்த ஆண்டு 1985-இல் டிசம்பர் 24, 25இல் மதுரை மாநகரில் மாநில மாநாடு கூட்ட முடிவு செய்துள்ளோம்.

நம்மிடம் அருளுலக ஐயங்களை அகற்றிக் கொள்ள வந்த ஆர்வலர் முதல், நமது அருட்பணியால் நலமடைந்தோர் வரை அனைவரையும் சித்தரடியான், சித்தரடியார், சித்தரடியாள்...... என்று எண்ணற்று உருவாக்கி அருளுலக இளவரசர்களாக, அருட்படைத் தளபதிகளாக, அருட்சேனை வியூகநாயகங்களாக, அருட்படையின் மாவீரர்களாக நாடு முழுவதும் சென்று செயல்படச் செய்தும்...... நம்மால் நன்மையடைந்தவர்கள் கூட நமக்குத் துணையாக வராத நிலையே உருவாகிவிட்டது. இது வருந்தத் தக்கதே.

உடனடியாக, நாம் நமது வரலாறு, தத்துவம், கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம்...... முதலியவைகளைப் படித்தவர் முதல் பாமரர் வரை புரிந்து கொள்ளுமளவுக்கு நமது பணிகளனைத்தும்; நமது அச்சிட்ட அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும், குருதேவர் ஏடுகளையும் விற்பதில் முனைவதாக இருக்க வேண்டும், நண்ப!

நாத்திகர்கள், மதமறுப்பாளர்கள், பகுத்தறிவுவாதிகள் ...... நமது மதத்தின் செயல்நிலைகளையும், தத்துவங்களையும் அநாகரிகமானவை, காட்டுமிராண்டித்தனமானவை, ஆபாசமானவை ...... என்று குறைகூறிக் குற்றம் சாட்டுகின்றார்கள். இதற்குப் பதில் கூறத் தெரியாமல் பலகாலமாக நமது மதவாதிகள் திகைத்துத் திக்குமுக்காடித் திணறித் தேங்கியுள்ளார்கள்.

இந்துமதம், அநாகரீகமாக வாழ்ந்த ஆதிமனிதனை வளப்படுத்த படைக்கப்பட்டதே ஆகும். மனிதன் ஆடை, அணிகலன், வாழிடம் ...... முதலிய வசதிகளில்தான் நாகரீகம் அடைந்தவனாக உள்ளானே தவிர; அவனது சிந்தையும், நெஞ்சும், உணர்வும், எண்ணமும், வேட்கையும்...... காட்டுமிராண்டி நிலையிலேயேதான் இருக்கின்றன. எனவேதான், மனிதனின் அகப்பண்புகளைத் திருத்திச் செம்மைப் படுத்தும் மதமான இந்து மதத்தில் ஆரம்பக் காலத்திலிருந்த பல நெறிமுறைகளும், விதிகளும், பழக்கவழக்கங்களும் தொடர்ந்து கையாளப் படுகின்றன. இந்துமதம் மிகமிகத் தொன்மையானது, பழமையானது...... என்பதை விளக்குவதாகத்தான் இந்து மதத்தில் நடைமுறைகள் கருத்துக்கும், கண்ணோட்டத்துக்கும் அப்பாற்பட்டு விளங்குகின்றன. இந்துமதத்தின் நடைமுறைகள் கசப்பான மருந்து போன்றவை. இவைதான், அருளை ஊற்றெடுக்கச் செய்கின்றன. அருளை அனுபவப் பொருளாக வழங்குகின்றன. இந்துமதம் மனிதர்களைத் தூய்மையும், வாய்மையும்...... அடையச் செய்யும் பேராற்றலுடையவை!

-- இவ்வுண்மையை ஏற்று ஒவ்வொரு இந்துவும் தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் தனது இந்துமதத்தை வளவளர்ச்சியும், மறுமலர்ச்சியும் அடையப் பாடுபட முன்வர வேண்டும். இதற்கான வழிமுறைகளும், நடைமுறைகளும், தெளிவான திட்டங்களும் எம்மிடம் இருக்கின்றன.

**வாருங்கள்!** **சிந்திப்போம்!** **செயல்படுவோம்!**

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

# “இந்து மறுமலர்ச்சி இயக்க வீர முழக்கங்கள்”

1. **பொருளுலகில்** வாழும் அனைத்து வகையான வறட்சிகளையும் அகற்றும் வல்லமை **அருளுலகப்** புரட்சிக்குத்தான் உண்டு.

2. **நாத்திகர்**களின் மடமைகளையும், பிற்போக்குகளையும், வெறிகளையும் கூட நலப்படுத்தும் வலிமை **ஆத்திகர்**களுக்குத்தான் உண்டு.

3. பகுத்தறிவு வாசகங்கள், சீர்திருத்த வாசகங்கள், புரட்சி வாசகங்கள், மறுமலர்ச்சி வாசகங்கள்...... உருவாக்கித் தராத சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை **அருள் வாசகங்கள்** அமைத்தே தீரும்.

4. **அருளொளி**யால்தான் அகவாழ்விலும், புறவாழ்விலும் மண்டிக் கிடக்கும் **இருள்களை** முழுமையாக அகற்ற முடியும்! முடியும்! முடியும்!

5. அறிவியல் சாதனைகளால் நலப்படுத்த முடியாதவைகளையும் நலப்படுத்துபவையே அருள்நெறிச் சாதனங்கள்.

6. நமது மதம் கதைகள் நிறைந்த ஒன்றல்ல, தத்துவ விதைகள் நிறைந்த ஒன்று.

7. நமது மத ஞானம் ஒரு மெய்ஞ்ஞான விஞ்ஞானம். இஞ்ஞானம் அகவாழ்வையும், புறவாழ்வையும் விளக்கும் விஞ்ஞானம். இதற்கு ஈடாக எஞ்ஞானமும் இல்லை.

8. நமது மதம் ஒரு மாபெரும் வாழ்வியல் தத்துவம்; சமுதாய இயல் சித்தாந்தம். [தத்துவம் = Philosophy; சித்தாந்தம் = Theology]

9. அருளை அனுபவப் பொருளாக அனைவருக்கும் வழங்க வல்ல உண்மை மதமே சித்தர் நெறி.

-- அன்பே சிவம் --

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னேர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல். அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குரு பாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். இவர் நல்ல ஆராய்ச்சிப் போக்கும், காலக் கணக்கீட்டு நோக்கும், வரலாற்றறிவும், இலக்கியக் கருத்துமுடைய சிறந்த நடுநிலைப் பேரறிஞராக வாழ்ந்து செயல்பட்டுள்ளார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
Email: indhuism@gmail.com
www.induism.org www.books.gurudevar.org